# சைவத் தமிழ்ச் சங்கம்
# அருள்மிகு சிவன் கோவில்

www.sivankovil.ch, www.sivantv.com

## 6 வயதுப் பிரிவு

தேவார மனனப்போட்டி

பித்தாபிறை சூடிபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

## • கொன்றைவேந்தன் (கூறல்) 13 வரிகள்

<u>கடவுள் வாழ்த்து</u>

**கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே**

உயிர் வருக்கம்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
4. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
7. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்
8. ஏவா மக்கள் மூவா மருந்து
9. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழகு
13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு

அன்பார்ந்த பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது